

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து கொளத்துப்பாளையம் பேரூராட்சி பகுதியில் திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு நிர்வாகிகளை சந்தித்தார். உடன் மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன், தங்க தமிழ்செல்வன் எம்பி, சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ., ராஜா எம்.எல்.ஏ., மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ., தாராபுரம் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் கே.கே.துரைசாமி, துணை செயலாளர் சி.செந்தில்குமார், காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் லட்சுமணன் உள்பட பலர் உள்ளனர்.

# தலைமைத் தேர்தல் ஆணையரை பதவிநீக்கக் கோரி போராட்டம்!

## இடதுசாரி கட்சிகள் அறிவிப்பு!

சென்னை, செப்.27- தலைமை தேர்தல் ஆணையரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி இன்று முதல் அக்டோபர் 2ம் தேதி வரை ஒரு வாரம் தொடர் போராட்டம் மேற்கொள்ளவுள்ளதாக கம்யூனிஸ்ட் கட்சிகள் அறிவித்துள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட 5 இடது சாரி கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், தற்போதைய தேர்தல் ஆணையம் வெளிப்படைத்தன்மை, ஜனநாயகச் செயல்பாடு, அனைவருக்கும் வாக்குரிமை எனும் அடிப்படை ஜனநாயகக் கோட்பாட்டைப் பாதுகாக்க தவறிவிட்டதாக குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல் மீதான பொது மக்களின் நம்பிக்கையைச் சிதைத்துள்ளது, தேர்தல் ஆணையத்தின் மீதான நம்பகத்தன்மை முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகவும் சரிந்துவிட்டது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு காரணமான தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும், SIR நடைமுறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், நீக்கப்பட்ட வாக்காளர்கள் மீண்டும் சேர்க்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தேர்தல் ஆணையர்கள் நியமன குழு உச்ச நீதிமன்றம் முன்மொழிந்த வழிமுறையின் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு முழுதும் இன்று முதல் அக்டோபர் 2 வரை தேசிய அளவில் போராட்டம் நடைபெறும் என்று இடதுசாரி கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளன.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பரவி வரும்

# டெங்கு - வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்திடுக!

## வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அறிக்கை!



கள்ளக்குறிச்சி, செப்.27– கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் அறிக்கை செய்தி விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது,

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நிலவி வரும் கடுமையான வெப்ப நிலை மற்றும் திடீர் மழைப் பொழிவால் ஏற்பட்டுள்ள பருவநிலை மாறுபாடு காரணமாக, பொதுமக்கள் தலைவலி, சளி, இருமல் மற்றும் வைரஸ் காய்ச்சல், டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு உடல் உபாதைகளால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இது குறித்து மாவட்ட நிர்வாகமும் சுகாதாரத் துறையும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் பரவி வரும் சூழ்நிலையில், கள்ளக்குறிச்சி மாவட்ட சுகாதாரத்துறை யும் மாவட்ட நிர்வாகமும் பொதுமக்களிடையே போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும். மேலும், பேரூராட்சிகள், நகராட்சிகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊழியர்கள் மூலம் வார்டுகளில் வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை அரசு முன்னெடுக்க வேண்டும்.

கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளாகச் சிகிச்சை பெற்று வருபவர்களைத் தவிர, தனியார் மருத்துவமனைகள் மற்றும் கிளினிக்குகளில் மருத்துவ ஆலோசனை பெறுவதோடு அல்லாமல், போதிய விழிப்புணர்வு இல்லாமல் பொதுமக்களில் பலர் மருந்துக் கடைகளில் நேரடியாக மாத்திரைகள் வாங்கிச் சாப்பிட்டும் வருகின்றனர். இதனால் மாவட்டத்தில் காய்ச்சல் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டெங்கு காய்ச்சல் அறிகுறிகளுடன் இது வரை 100க்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் ரத்த மாதிரி முடிவுகளின் அடிப்படையில், கடந்த 1ஆம் தேதி முதல் நேற்று வரை 30 பேருக்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. மேலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தற்போது டெங்கு காய்ச்சல் பரவல் அதிகமாக உள்ளதால், மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தனிப் படுக்கைகள் கொண்ட சிறப்பு வார்டுகள் அமைக்கப்பட வேண்டும். அந்த வார்டுகளில் கொசு வலை, முகக் கவசம், நிலவேம்பு குடிநீர் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியதுடன், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செயல்பட்டு வரும் காய்ச்சலுக்கான சிறப்புப் புறநோயாளிகள் பிரிவைப் போன்றே, 24 மணி நேரமும் மருத்துவர்களும் செவிலியர்களும் தொடர்ந்து பணியில் இருப்பதை அரசும் மாவட்ட நிர்வாகமும் உறுதி செய்ய வேண்டும். கள்ளக்குறிச்சி மாவட்ட சுகாதாரத்துறை, எதிர்வரும் வடகிழக்குப் பருவமழை மற்றும் பண்டிகை நாட்களை ஒட்டி வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலத்திற்குப் பயணம் செய்யும் பொதுமக்களைக் கவனத்தில் கொண்டு, பேருந்து நிலையங்களிலும் தேவையான மருத்துவ உதவிகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

டெங்கு மற்றும் பிற காய்ச்சல் நோய்களைத் தடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குத் துரிதமான சிகிச்சை வழங்குவதற்கும், போர்க்கால அடிப்படையில் உடனடி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் ஆயத்தப் பணிகளையும் மெத்தனமின்றி விரைந்து மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உடனடியாக மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை வழங்கும் வகையில், மருத்துவர்கள், செவிலியர்கள், ஊழியர்கள் மற்றும் உயிர் காக்கத் தேவையான மருந்துகள் தயார் நிலையில் இருப்பதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும். மருத்துவப் பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுத்தப்படுவதுடன், அவர்களின் பாதுகாப்பிற்குத் தேவையான முகக் கவசம், உடை போன்ற மருத்துவ உபகரணங்களும் போதுமான அளவில் இருப்பு உள்ளதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

டெங்கு காய்ச்சல் காரணமாகத் தீவிர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்காக, மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் ஐ.சி.யூ.வில் தனிப் படுக்கைகள் தயார் நிலையில் இருப்பதைச் சுகாதாரத் துறை உறுதிப்படுத்த வேண்டும்.

மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் நோய்களுக்கான சிகிச்சைக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகள், மருத்துவர்கள், செவிலியர்கள், படுக்கைகள் போதுமான அளவில் உள்ளன என்பதையும், பொதுமக்கள் காய்ச்சல், உடல்வலி, தலைவலி, வாந்தி, வயிற்று வலி, ரத்தப்போக்கு போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவமனையை நாடுவதற்கான விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும் என வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் அரசையும் சுகாதாரத் துறையையும் வலியுறுத்தியுள்ளார்.




மக்கள் விரோத தொழிலாளர் விரோத மத்திய மாநில அரசுகளை கண்டித்து கோவை மாவட்ட தொ.மு.ச கவுன்சில் (எல்பிஎப்) மற்றும் இணைப்பு சங்கங்கள் சார்பில் கவுன்சில் செயலாளர் சிடிசி துரைசாமி தலைமையில் கவுன்சில் தலைவர் ராக்கிமுத்து வரவேற்புரையில் கவுன்சில் பொருளாளர் ராதா கிருஷ்ணன், கவுன்சில் நிர்வாகிகள் வணங்காமுடி, உமாகாந்தன், ஸ்டீபன், அப்பாவு, வாசுகி, கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தொமுச பேரவை, தொலைத்தொடர்பு துறை இணை பொதுமேலாளர் விஜயகுமார், பேரவை இணை பொது செயலாளர் பிரபாகரன், மாநில தொழிலாளர் அணி துணைச் செயலாளர் தமிழ்ச்செல்வன், மற்றும் நாகராஜ் ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் தொ.மு.ச. சிவில் சப்ளை ராஜ கிருஷ்ணன், டாஸ்மாக் தொ.மு.ச. சுப்பிரமணி, மின்வாரியம் தொ.மு.ச. சந்திரன், ஆவின் தொ.மு.ச. ஆனந்த், போக்குவரத்து தொ.மு.ச. செல்லப்பன், ஓய்வு பெற்ற போக்குவரத்து தொ.மு.ச. பாலு, மோட்டார் வாகன தொ.மு.ச. மோகன், பொறியாளர் தொ.மு.ச. கோபால், தமிழ்நாடு சிறு கடைகள் மற்றும் குறு தொழிலகம் தொ.மு.ச. குமாரராஜ பாண்டியன், சிடிசி கணேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பது குறித்து கோவை வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட குண்டடம் மேற்கு ஒன்றிய, ஊராட்சி பகுதிகளுக்கான தேர்தல் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, ஒன்றிய கழக செயலாளர் சு.கசந்திரசேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.ஜெயக்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் உள்பட மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மதுராந்தகம் இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்

# இ.பரந்தாமனை ஆதரித்து வீடு, வீடாகச் சென்று வாக்குச் சேகரிப்பு!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் பிரச்சாரம்!

அச்சிறுப்பாக்கம், செப்.27- மதுராந்தகம் இடைத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் இ. பரந்தாமனுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னால் அமைச்சர் செஞ்சிமஸ்தான் வீடு, வீடாக சென்று வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் .

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் திமுக கழகத்தின் சார்பில் கழகத்தின் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமன் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார்.

இவரை ஆதரித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அகிலி, மாத்தூர், ஊனமலை, சிறு நாகலூர் ஆகிய ஊராட்சிகளில் உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்து வருகின்றனர்.

அப்போது அகிலி ஊராட்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர், செஞ்சி மஸ்தான்தலைமையில், அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் தம்பு, ஒன்றிய கவுன்சிலர் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மொடையூர் துரை, செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், உள்ளிட்ட திமுகவினர்

அகிலி ஊராட்சியில் ஒவ்வொரு வீடாக சென்று திமுக ஆட்சியில் செய்த பல்வேறு திட்டங்களை வாக்காளர்களிடத்தில் கூறி இத்திட்டங்களை மீண்டும் செயல்படுத்துவதற்கு உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு கேட்டு துண்டு பிரசுரத்தை வழங்கினர்.

இதில் அகிலி ஊராட்சி நிர்வாகிகள் விஜயன், மார்ட்டின், விக்டர், வரதராஜன், செஞ்சி ஒன்றிய அவை தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதிகள் அய்யாதுரை, அர்ஷத்அவலூர் பேட்டை ஊராட்சி மன்ற தலைவர் செல்வம், எஸ். பி.சம்பத், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜம் போதி பழனி, செஞ்சி தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் மணிவண்ணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.



மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் மின்னல் சித்தாமூர் ஊராட்சி 187,188 பாகங்களுக்கு உட்பட்ட மாற்றுக் கட்சியினர் மற்றும் பொதுமக்களை வீடு வீடாக நேரில் சந்தித்து வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களுக்கு திராவிட மாடல் அரசின் திட்டங்களை எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார், அப்போது கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் சுகன்யாவை ஆதரித்து கொளத்துப்பாளையம் பேரூர் பாகம் எண்: 206 கணபதிபாளையம் பகுதியில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. மார்க்கண்டேயன் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், நவநீதக்கண்ணன், ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, காங்கேயம் நகராட்சி மன்ற சேர்மன் சூரியபிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, எப்போதும்வென்றான் சோலைசாமி திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் முத்துக்குமார், ஒன்றிய துணைச் செயலாளர் ராஜபாண்டி, தேர்தல் பார்வையாளர் சோலையப்பன், துரைபாண்டி, கழக நிர்வாகிகள் இருந்தனர்.



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி கடையம் வடக்கு ஒன்றியம் சேர்வைக்காரன்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கேளாப்பிள்ளையார் கிளைச் செயலாளர் சமுத்திர பாண்டி உடல் நலம் பாதிக்கப்பட்டு இதய அறுவை சிகிச்சை முடித்து மருத்துவ ஓய்வில் இருந்து வருகிறார். கழகத்தின் வேர்களை காப்போம் என்ற உன்னதமான நோக்கத்தின் அடிப்படையில் சமுத்திர பாண்டியை தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். உடன் கடையம் ஒன்றிய செயலாளர்கள் வடக்கு மகேஷ் மாயவன்,மேற்கு ஜெயக்குமார், ஒன்றிய அவை தலைவர் ரவி,யூனியன் ஆத்மா சேர்மன் குணசீலன், மாவட்ட பிரதிகள் துரைப்பாண்டி,அன்பழகன், உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.